RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s831

# ‘முன்னை இட்ட தீ’ சிறுகதையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

**ஜெ. மணிச்செல்வம்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வி.இ.நா.செ.நா. கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா

# Environmental Awareness in the short story ‘Munnai Itta Thee'

**J. Manichselvam** [a, *]

[a] Department of Tamil, VHNSN College (Autonomous), Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: manichselvam@vhnsnc.edu.in

Received: 23-04-2021
Revised: 09-05-2022
Accepted: 13-05-2022
Published: 21-07-2022

**ABSTRACT**

In Tamil literature there are many ideas which stress the importance of Environment and Environmental awareness of people. “Vinjani” a famous short story writer has written a story titled ‘Munnai itta Thee’. The story is about a Dye industry. This industry would spoil river water and underground water used by the people of villagers. It would pollute the land and water with chemicals. Though some people may get jobs in the industry, the land would become barren. In future, the industry could spoil the environment. So, people of the area start a movement to stop this under the leadership of Sathyamorthy, a retired pollution officer and social activist. This article analyses the environmental pollution which is the central theme of this story and a major problem of this world.

**Keywords:** Munnai Itta Thee, Vinjani, Environmental Awareness, Pollution

## முன்னுரை

தற்கால இலக்கியங்களில் குறிப்பாகச் சிறுகதை புதினம் முதலியவற்றில் சாயத்தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், காகிதத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் போன்றவற்றால் ஆபத்தான கழிவுகளை வெளியேற்றுவதால் சுற்றுச்சூழலுக்குப் பெரும் ஆபத்து ஏற்படுவதை மையக்கருத்துகளாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. இத்தகைய படைப்புகள் இச்சமுதாயம் சீர்பட்டு சிறப்படைய வேண்டும் என்னும் நோக்கில் படைக்கப்படுகின்றன. இவ்வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையக்கருவாகக் கொண்டு படைப்பாசிரியர் விஞ்ஞானி அவர்களால் படைக்கப்பட்ட ‘முன்னை இட்ட தீ’ சிறுகதை சிறந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழல்

மக்களின் நலவாழ்வுக்குச் சுற்றுப்புறச்சூழலின் பங்கு இன்றியமையாதது. ‘நாம் சுற்றுப்புறம் என்பதனை அறிவியல் அறிஞர் ஹெக்கல் என்பவர் சூழ்நிலையியல் என்கிறார் (Gunasekaran, 2008). தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றுக்கும் சூழ்நிலைக்குமிடையே உள்ள தொடர்புகளை விளக்குவது’ என்று அவர் குறிப்பிடுகிறார் (Ramachandran, 2006). பொதுவாகச் சுற்றுச்சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று மண்டலம், காடுகள், விலங்கினங்கள், மனிதச் சமுதாயம், அச்சமுதாயத்தின் வாழ்க்கை முறைகள் அதன் விளைவுகள் அனைத்தையும் குறிப்பதாகும்.

 DOI: 10.34256/irjt22s831

'நமது கால கட்டத்தில் அளவுக்கு மீறிய தொழிற்சாலைகளின் பெருக்கம், அதன் தொடர்ச்சியாக எரிச்சக்திகளின் தேவைக்காக அணுஉலைகளின் பெருக்கம், நச்சுக்கக்கும் பல்வேறு இயந்திரப் பொருட்களின் உற்பத்தி, பெருநகரங்களின் உருவாக்கம், இதனால் நிலம், நீர், வெளி முதலிய இயற்கை ஆற்றல் மாசுபடுதல், உலகம் வெப்பமடைதல் என பூமியின் இருப்பிற்கே ஆபத்து வரும் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே இந்தப் பூமியைக் காப்போம் வரும் தலைமுறைக்கு வாழ்விடம் அளிப்போம் என்கின்ற கருத்தாக்கங்கள் முன்னுக்கு வருகின்றன. வாழ்க்கையின் அனைத்து வடிவங்களிலும் இந்தப் பேராபத்தினை உணர்ந்தே தீர வேண்டிய நெருக்கடி முற்றியுள்ளது என்பதே இலக்கியக் கல்வியிலும் இந்தச் சுற்றுச்சூழல் குறித்த அக்கறைகள் பெரும் ஆர்வத்தோடு உரையாடலுக்கு உள்ளாகின்றன" என்று எடுத்து இயம்புகிறார் (Prapanchan, 2012). ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குச் சுற்றுச்சூழல் முக்கியபங்கு வகிக்கிறது. சுற்றுச்சூழலை நெறிப்படுத்தாவிட்டால் நாட்டில் வளர்ச்சி என்பது இல்லை.

'புவி வெப்பமடைதல், பருவநிலை மாற்றம், காடுகள் பெருமளவில் அழிக்கப்படுதல், அதனால் பல உயிரின பாதுகாப்பு பாதிப்படைதல், தண்ணீர் தட்டுப்பாடு, பாலைவனமாதல், நீர், நிலம், காற்று ஆகியவை மாசடைதல், கடல் சூழியில் பாதிப்பு, விவசாய முறைகளில் தடங்கல்கள், இரசாயண கழிவுகள் அதிகரித்தல் போன்ற பல்வேறு பிரச்சனைகளால் இந்த உலகம் பாதிப்படைந்துள்ளது" என்று சுற்றுச்சூழல் சிந்தனைகள் என்ற நூலில் பதிவு செய்துள்ளார் (Arima Praga, 2012). இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு என்பது இயற்கை மாறுபாடுகள் காரணமாக நிகழுகின்ற இயல்பான பேரழிவுகள் மட்டுமின்றி மனிதர்களின் முரண்பட்ட செயல்களால் நிகழுகின்ற பேரழிப்புகளால் நிகழ்ந்தவையாகும்.

'வேளாண்துறையில் இயற்கைப் பாதிப்பின் காரணமாக நிகழ்ந்த சீர் குலைவுகள் ஒரு புறமிருக்க, பெருகிவரும் அறிவியல் நிலைப்பட்ட காரணிகளாலும் தொழில்மயக் காரணிகளாலும் நிலவுடைமைச் சீரழிவை வேறொருவகையில் தனதாக்கிக் கொண்டு தமிழகத்தின் நிலவளம் மற்றும் இயற்கை வளங்களின் மீது நவீனத் தொழில் நுட்பத்தின் துணையோடு ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இத்தகைய ஆதிக்கங்களால் விவசாயம் நலிவுற்றத்தோடு வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நிலைகளிலும் சொல்லொணாப் பாதிப்புகள் ஏற்பட்டன' என்று புலப்படுத்தியுள்ளார் (Gunasekaran, 2008).

## நீரின்றி அமையாது உலகு

சங்ககால மன்னர்கள் ஆறுகளையும், ஏரிகளையும், குளங்களையும் பாதுகாத்து வந்தனர் என்பதை சங்க இலக்கியங்களில் காணலாம். மன்னரின் முதன்மையான கடமை மழைநீரை சேமிப்பது என்பதை,

'நிலன்நெறி மருங்கின் நீர்நிலை பெருகத்

தட்டோரம்ம இவண்தட்டோரே

தள்ளாதோர் இவண் தள்ளாதோரே'

என்று புறநானூறு கூறுகிறது (Puliyur kesigan, 2004). இவ்வுலகத்தில் தோன்றியுள்ள அனைத்து உயிர்களும் உயிர்வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதது உணவும், நீரும் ஆகும். இதனாலேயே திருவள்ளுவரும்,

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉம் மழை'

என்று குறிப்பிட்டுச் செல்கிறார் (Gowmarishwari, 2004). இத்தகைய தூய நீரை பயன்படுத்தும் நாம் அதை நம் பிற்கால சந்ததியாருக்கும் கொடுத்துவிட்டு செல்ல வேண்டும் என்ற உயரிய எண்ணம் மக்களிடையே இருக்க வேண்டும்.

## தொழிற்சாலைக் கழிவுகள்

மனித வாழ்க்கையின் வளர்ச்சிக்கு அடிப்படையாக வளமான சுற்றுச்சூழலே விளக்குகின்றது. சுற்றுச்சூழலைக் கொண்டே இவ்வுலக உயிர்களின் வாழ்க்கை நடைபெறுகிறது. இத்தகைய சூழலில் ஏதாவது இடையூறு நேரிடுமாயின் உயிர்களின் வாழ்க்கையும் அழிந்து விடும். தொழிற்சாலைகள் பெரும்பாலும் ஆற்றங்கரைப் பகுதிகளின் அருகில் அமைந்துள்ளன. தொழிற்சாலைக்குத் தேவையான நீரை எடுத்துக் கொள்வதற்கும், கழிவு நீரை வெளியேற்றுவதற்கும் வசதியாக இருப்பதால் இவ்வாறு அமைக்கப்படுகின்றன.

'நீரிலே அமில வாயுக்கள் மற்றும் பொருட்கள் கலந்து நீரைதற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பயன்படுத்த முடியாமல் நீரின் தரத்தை மாற்றக்கூடிய அளவில் நச்சுக்கள் கலந்திருந்தால் அதனை நீர் மாசுறுதல்" (Water Polution) என்கிறோம்.

சாயத்தொழிற்சாலைகள், தோல்பதனிடும் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், காகிதத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் போன்றவற்றிலிருந்து கழிவுப் பொருட்கள் நீருடன் கலந்து வெளிவந்து அருகில் உள்ள நீர்நிலைகளைச் சென்று அடைந்து மாசுபடுத்துகிறது (Balu, 2006).

'இந்தியாவில் குளோரின், சலவைச் சோடா தயாரிக்கும் தொழிற்சாலைகளிலிருந்து 1000டன்கள் பாதரசம் வெளியேற்றப்படுகிறது. உலோகம் மற்றும் சாயத்தொழிற்சாலைகளில் துத்தநாகம் மற்றும் வேறு மாசுக்களும் ஆற்றுநீரில் கலக்கப்படுகிறது. அணுசக்தி ஆலைகளிலிருந்தும் கதிரியக்கப் பொருட்களிலிருந்தும் வெளியேறும் கழிவு நீரானது ஆற்றுநீரை மாசுபடுத்துகின்றது. தொழிற்சாலைக் கழிவுநீர் மண்ணை ஊடுருவிச் சென்று நிலத்தடி நீரையும் மாசுபடுத்துகிறது. தொழிற்சாலை அருகில் உள்ள நீரும் இதனால் மாசுபடுகிறது" என்று தனது கருத்தை முன்வைக்கிறார் (Sethuraman, 2006). தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளால் நீர் மாசடைகிறது. தொழில்வளர்ச்சி ஏற்படும் போது, பல தொழில்கள் ஏற்படுகின்றன. அவையாவும் தங்களுடைய வணிகநலத்தை மட்டும் மனத்தில் கொண்டு மனித நலத்தை விட்டுவிடுகின்றன. இன்றைய தினம் பழைய ஆறுகள், குட்டைகள், குளங்கள் ஆகியவை இந்தக் கழிவுகளைத் தாங்கிச் செல்லும் பாதைகளாக மாறிவிட்டன.

'கங்கை நதியில் புற்றுநோயை உண்டாக்கும் மாசுக்கள் கலந்துள்ளன என்று தேசிய புற்றுநோய் மையத்தின் ஆய்வு கூறுகிறது. கங்கை, யமுனை உள்ளிட்ட நதிகள் குளிப்பதற்குத் தகுதியற்றவை என்று சுற்றுச்சூழல் ஆர்வலர் அனில் தலைமையில் டேராடூனில் இயங்கி வரும் அரசு சாரா நிறுவனம் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது" என்று உதயை மு. வீரையன் அவர்கள் குறிப்பிடுவது.

## 'முன்னை இட்ட தீ' சிறுகதையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சத்தியமூர்த்தியின் குடிசை ஊரின் எல்லையில் அமைந்திருந்தது. சத்தியத்துக்காகவே வாழ்பவரின் பெயர் போல் அமைந்துள்ளது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவர் மாசுகட்டுப்பாடு அதிகாரி. ஆற்றுநீரை மாசுபடுத்திய ஒரு தொழிற்சாலைக்கு எதிராக செயல்பட்டு, அந்தப் போராட்டத்தில் இரண்டு கைகளை இழந்தவர். அதன்பின் வேலையை விட்டுவிட்டு முழுநேர சமூக வேலையில் இறங்கியதும், குறிப்பாகச் சுற்றுப்புறச்சூழலில் அக்கறை எடுத்துக்கொண்டு பல போராட்டங்களில் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு உலக அளவில் விருதுகளும் பெற்றுள்ளார். வெளியூர் கிராமத்து இளைஞர்கள் இருவர் சத்தியமூர்த்தி அவர்களை தேடி வருகின்றனர். இளைஞன் ஒருவன் தூக்கிப்போட்ட நாற்காலியில் அமருகிறார். இளைஞர்கள், 'நாங்க வயலூர் பக்கத்துல தொறவனூர் கிராமம். சுபாஷ் இளைஞர் மன்றம் இப்ப எங்களுக்கும், பக்கத்திலே இருபது கிராமங்களுக்கும் ஒரு பெரிய பிரச்சனை எங்க ஊரு பக்கதிலே பெரிய சாயத்தொழிற்சாலை ஒண்ணு கட்ட ஏற்பாடு நடக்குது அவங்களுக்கு அரசாங்கமும் புறம்போக்கு நிலம் ஒதுக்கியிருக்குகங்க யாரோ ஒரு மந்திரியோட மச்சான் தான் கம்பெனி முதலாளி. பெரிய ஃபாக்டரி... கட்டடமெல்லாம் கட்ட இடமெல்லாம் அளக்கத் தொடங்கிட்டாங்க... பிரச்சனை என்னன்னா எங்க கிராமத்தை ஒட்டி ஒரு ஆறு ஓடுதுங்க... இந்த சாயத்தொழிற்சாலை கழிவுநீரை அந்த ஆற்றில் தான் விடப்போறாங்க... யாரையும் போய் பார்த்துச்

சொல்லக் கூட முடியலை ஒரு முறை ஊர்ப்பெரியவங்க எப்படியோ முரண்டுபிடிச்சு பாக்டரி ஆபிஸருங்க சிலரைப் பார்த்து ஆட்சேபணை தெரிவிச்சாங்க. பார்க்கப் போன பெரியவங்களை மரியாதையாக் கூட நடத்தலை, அந்த ஆறு ஒண்ணு தான் எங்க எல்லாக் கிராமத்துக்கும்... குடிக்கத் தண்ணயில்லாம பாசனம் பண்ண முடியாம பெரிய பிரச்சனையாவுங்க நீங்க வரணும் ஐயா... ஜனங்க எங்களை நம்பிக்கையோட அனுப்பிச்சிருக்காங்க.

என்று தங்கள் கிராமத்தில் சாயத் தொழிற்சாலையை வரவிடாமல் தடுக்க, அவரது தலைமையில் போராட வேண்டும் என்று இருவரும் தெரிவித்தனர். மறுநாள் காலை அவர்களோடு சத்தியமூர்த்தி கிராமத்துக்குச் செல்கிறார். அவரை எதிர்ப்பாத்திருந்த மக்கள் கூட்டம் கூடுகிறது. சாயத் தொழிற்சாலையின் தீங்கினைப் பற்றி அவர் உரையாற்றுகின்றார்.

'பொதுமக்களே, நீங்கள் இத்தனை பேர் இங்கு கூடியிருப்பதே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஆலைக் கழிவுகளைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் நீங்கள் சிந்திக்கத் தொடங்கியிருப்பது நல்ல எதிர்காலத்தின் அடையாளம். இங்கே சாயப்பட்டறை கழிவு நீரைப் பற்றிய உங்கள் அச்சம் நியாயமானதுதான். வயல் சூழ்ந்த இந்த ஊரில் இந்தக் கழிவுநீரை அனுமதித்தால் அதன் பின்னர் என்ன முயன்றாலும் விவசாயம் செய்ய முடியாது. அதுமட்டுமல்ல உங்கள் உடல் நலமும் அடியோடு கெட்டுப்போகும்" என்று உரையாற்றுகின்றார். தொழிற்சாலையில் குடும்பத்தில் ஆள் ஒருவருக்கு வேலை தந்தாலும் எதிர்காலச் சந்ததிகளின் வாழ்வு கொடுமையாகிவிடும் என்பதை,

'உடனே வேலை கிடைக்கும் தான் ஆனா நீங்க சுவாசிக்கிற இந்த நல்ல காத்தை உங்க சந்ததியும் சுவாசிக்கணும், நீங்க குடிக்குற நல்ல தண்ணீரைப் பேரன், பேத்திங்க, எல்லாம் குடிக்கணும். வேலைக்கும் போனஸக்கும் ஆசைப்பட்டா, மூச்சுவிடக் கூட நல்ல காத்தில்லாம கஷ்டப்படுவீங்க" என்று விளக்குகின்றார். முதலாளியின் பண பலமும், அரசியல் பலமும் மக்கள் கூட்டத்தின் உரிமைப் போராட்டத்தில் தோற்கும் என்று அவர் நம்பிக்கை ஊட்டுகின்றார்.

'அன்று சுதந்திரப் போராட்டத்திற்காக மக்கள் எப்படி அனைவரும் ஒன்று சேர்ந்து போராடினார்களோ அதைப்போல சுற்றுச்சூழல் பேரழிவிற்கு எதிராக அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும். இயற்கையை அழிவுபடாமல் காக்க இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்கு அடியெடுத்து வைக்கும் நேரம் வந்துவிட்டது' (Bharathidasan, 2006). என்ற கருத்தை உள்வாங்கி இன்றைய தலைமுறைகளை பெருநிறுவனங்களிடமிருந்து நமது இயற்கையின் சூழலைக்காக்கப் புறப்பட வேண்டும் என்ற சிந்தனையை,

'உணர்ச்சி கொப்பளிக்க மேலும் உத்வேகத்துடன் கோஷங்களை எழுப்பிக் கொண்டு கிளம்பியது அந்தப் பெரும்கூட்டம் இந்தக் கிராமத்துப் படையை இனி எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது' என்று இந்த சிறுகதை நமக்கு உணர்த்துகிறது.

## முடிவுரை

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தோன்றியுள்ள இன்றைய சூழலில் உலகெங்கும் உள்ள கலை இலக்கியப் படைப்பாளிகள் சூழலியல் பேரழிவு குறித்தும், அந்தப் பேரழிவில் இருந்து உலகையும், மனித குலத்தையும், காப்பது குறித்தும் தமது படைப்புகளில் பதிவு செய்து வருகின்றனர். படைப்பாளர் விஞ்ஞானி அவர்கள் படைத்த 'முன்னை இட்ட தீ' சிறுகதையில் சாயத்தொழிற்சாலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் கழிவுகளையும், அழிவிலிருந்து மக்களைக் காப்பதற்காக முன்வைத்த போராட்டத்தையும் மேலும் சுற்றுச்சூழல் குறித்தும், நீர்வளத்தின் முக்கியத்துவம் குறித்தும், தொழிற்சாலைகள் ஆபத்தான கழிவுகளை வெளியேற்றுவதால் சுற்றுச்சூழலுக்குப் பெரும் ஆபத்து ஏற்படுவதைக் குறித்தும் 'முன்னை இட்ட தீ' சிறுகதையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இடம் பெறும் விதத்தையும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## References

Arima Praga, J.J., (2012) Sutrupura Soozhal Sinthanaigal, Revathy Pathippagam, Chennai, India.

Balu, V., (2006) Sutrusulal Kalvi, Madurai Kamaraj University, Madurai, India.

Bharathidasan, (2006) Pasumai Chinthanai, Paavai Pathippagam, Chennai, India.

Gowmarishwari, S., (2004) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Gunasekaran, A., (2008) Kalai Ilakkiya Veliyum Samuga Needhikkana Sila Kuralkalum, International Institute Of Tamil, Chennai, India.

Prapanchan, (2012) Ilakkiya Thiranaivu Kotpadugal, Aazhi Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (1958) Purananuru, Paari Niliyam, Chennai, India.

Ramachandran, K., (2006) Puthukavithaikalil Panmuga Paarvai, New Century Book House, Chennai, India.

Sethuraman, C., (2006) Sutrusulal Payilvugal, Paavai Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License